# தேன்கூடு

ஆசிரியர்: நெல்லை நடேஸ்

அக்டோபர் 79 —————————— 1/-

"கலை, இலக்கியம் வர்க்கங்களுக்குட்பட்டது. எந்தவொரு கலை, இலக்கிய வெளிப்பாடுகளும் ஏதோவொரு வர்க்கத்திற்கு சேவை செய்துகொண்டேயிருக்கின்றது.
வர்க்கங்களைக் கடந்த கலை, இலக்கியம் என்றுமே எங்குமே இருக்க முடியாது."

சிறுகதை

வாசகர் கருத்து

கவிதை

புதுக் கவிதை

கட்டுரை

காய்தலும் உவத்தலும்

விமர்சனம்

கலை இலக்கிய அறிவியல் இதழ்

## நாடகக் குறிப்புக்கள்:

* பெரியவர்கள் சிறுர்களின் பாத்திரங்களைத் தாங்கி நடிக்கும் ஜேர்மனிய நாடக மரபைத் தழுவி தமிழில் முதல் முயற்சியாக நாடக அரங்கக் கல்லூரி ''கூடி விளையாடு பாப்பா'' நாடகத்தை மேடையேற்றி வெற்றிகண்டுள்ளது. இந்நாடகம் பல்வேறு பாடசாலைகளிலும் மேடையேற்ற முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

* அவைக்காற்று கலைக்கழகம் ரெனிஸ் வில்லியத்தின் ''கண்ணுடி வார்ப்புகள்'' நாடகத்தை ஒன்பது தடவைகள் மேடையேற்றியுள்ளது.

* இலங்கைக் கலைக்கழகம் தமிழ்நாடகத்தேர்வொன்றினை நடாத்தவுள்ளது இத்தேர்வு பழையமரபுகளுக்கு முதன்மை கொடுக்குமா? அல்லது நவீன நாடகங்களை அங்கீகரிக்குமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

* யாழ் பல்கலைக்கழக தமிழ் மன்றம் 'ஆறு நாடகங்கள்' என்ற தலைப்பில் மஹாகவியின் ''புதியதொரு வீடு'' மாவை நித்தியானந்தனின் ''ஐயா எலக்சன் கேட்கிறுர்'' பௌசுல் அமீரின் 'ஏணிப்படிகள்' குழந்தையின் ''கூடி விளையாடு பாப்பா' நா. சுந்தரலிங்கத்தின் ''விழிப்பு' ஆகிய நாடகங்களை வெளியிடுகின்றது

* கவிஞர் இ. சிவானந்தன் நாடக அரங்கியலுக்கான பட்டமேல் நிலை ஆசிரிய தகைமை பயிற்சிநெறிக்கு எழுதிய ஆய்வுக் கட்டுரையான ''இலங்கை பல்கலைக்கழக தமிழ் நாடகஅரங்கு'' நூலாக நடிகர் ஒன்றியத்தினுல் வெளியிடப் படவுள்ளது.

* முருகையனின் ''கடூழியம்'' சி. மௌனகுருவின் ''சங் காரம்'' நா. சுந்தரலிங்கத்தின் ''அபசுரம்'' இ. சிவானந்த னின் ''காலம் சிவக்கிறது'' ஆகிய நான்கு நாடகங்களின் தொகுப்பினை வெளியிடும் முயற்சியில் நடிகர் ஒன்றியம் ஈடு பட்டுள்ளது.

# தேன் கூடு

ஆசிரியர்: நெல்லை நடேஸ்

மலர் — 1 இதழ் — 1

ஆசிரியர் குழு:

வை. திருநாவுக்கரசு

சுமதி - அருட்பிரகாசம்



முகவரி:

நெல்லியடி,
கரவெட்டி.

# எம்மைப்பற்றி!

சஞ்சிகையொன்றை வெளியிடலாமென எண்ணும் போது எத்தனை ஆதங்கள் வரும் எத்தனை ஆயிரத்தை கொட்டை விட எண்ணம் என்கிற நக்கல்கள், அவை தவிர நிதிப் பிரச்சனைகளை ஒருவாறு சமாளித்தால் தரமான விடயங்களை எழுப்புதலான திண்டாட்டம்.

எப்படியோ பலரையும் பலதையும் சமாளித்து வாசகர்களின் ஒத்துழைப்பை ஒரு மூலதனமாகக் கொண்டு "தேன்கூடு" வெளிவருகின்றது.

எம்மைப் பொறுத்தவரை இந்த நாட்டில் ஒறறுத்தாமுவற்ற சமுதாயம் தான் குடிகளேள் அதனைத் தாம்பாளத்தில் வைத்தும் பெறலாமென நம்பாத அந்தவேளை பாட்டாளி வர்க்கத்தை பலாத்காரத்தை முழுதாக, பூரணமாக, ஒரே தீர்வாக நம்புகின்றோம் அதே வேளை இலக்கியத்தை அதற்கான முழுமையான கருவியாகவும் சிந்திக்கவில்லை.

ஈழத்தில் வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகைகள் பல பொதுப் பிரச்சனைகளையும் எதிர்நோக்குகின்றன. அவற்றிற்கு துணிவாக முகம் கொடுக்க தமிழ்ச் சஞ்சிகையாளர் அமைப்பொன்றின் அவசியத்தை வலியுறுத்துகின்றோம்.

— ஆசிரியர்

# இலட்சியவாதம்

எங்கள் கிராமத்தைத்
பாலுந் தேனும் பழப்
பாகும்
பாயச் செய்ய
முயற்சிகள் நிகழ்ந்தன.

நிலமுடையவர்கள்
நிலத்தைத் தருக
பணமுடையவர்கள்
பணத்தைத் தருக
அதுவு மற்றவர்
உழைப்பைத் தருக.

சுவர்களில் எழுதினர்
தூண்களில் ஒட்டினர்
குரல்வளை பெருத்துக்
கத்தினர் மேடையில்
ஒரு சிறு நிலமும்
ஈவாரில்லை.
சில்லறை கொஞ்சம்
சேர்ந்தது உண்மை.

நிலைமையை விளக்கித்
தலைவரை அணுகினர்
வான வெளியிற்
கருஞ் சிற பெருத்துக்
காற்றுந் தூறலும்
மழையும் வந்தது.

புதிய நகரைப்
பெருகச் செய்யும்
ஆரம்ப மொன்று
அருண்ட தென்று
தொண்டர் எழுந்து
துள்ளினர், ஆடினர்.

சபா. ஜெயராசா

# இசைக்கு மறக்காத பாடல்

காவலூர் எஸ். ஜெகநாதன்

முத்து சிணுங்கிக் கொண்டு நின்றான். தோய்த்து இன்னும் உலராத சட்டை உடம்புச் சூட்டில் காய்ந்து விடுமென்ற நினைப்பில் தாய் அணிந்து விட்டது: குடிசைத் தூணோடு சாய்ந்து அழுக்குப் படிந்திருந்தது. அவனுக்கு அளவில்லாத சிறிய காற்சட்டை ஏறி இறங்கிக் கொண்டு நிற்கிறது. கையிலிருந்த சிலேட்டை வெறுப்போடு பார்த்துப் பார்த்து அவன் சிணுங்கிக் கொண்டு நின்றான்;

"பள்ளிக்குப் போகவில்லையாடா" தாய் பார்வதி கேட்டுக் கொண்டே வெளியே வருகிறாள். குசினியை விட்டு

அவனிடம் ஒரு முனகல்

குசினியின் கோலங்கள் படிந்திருந்த முத்தானையால் மகன் முகத்துப் பவுடரைத் துடைக்கிறான். அளவாக அதுவே விபரீதமாகி சிலக்கரி முகத்தில் படம் தீட்டியது. சீ... சீ.. முழுவதை வியர்வையால் துடைத்து விட்டான். மீண்டும் ஆ விலை குறைந்த பவுடர் முகத்தில் ஏறுகிறது!

அப்போதும் முத்துவிடம் முனகல்

"நேரம் போச்சுது... பள்ளிக்குப் போவன்டா"

',மாட்டேன்று மாட்டேன் விறைப்பாக கூறுகிறான் முத்து தலையில் அடித்துக் கொண்டாள் பார்வதி அவனது மனக் கோட்டையை எட்டி உதைப்பது போன்று அவன் சுலபமாக கூறிவிட்டான் மாட்டேன் என்று "என்ர கண்ணில்லே நீ படிக்க பெரியவனா வரவேணும் அப்பதான் அம்மா சிரிப்பா என்ர ராசா இல்ல... அவள் கெஞ்சுகிறாள்.

"மாட்டேன்று மாட்டேன்" மகனுடைய பிடிவாதம் அவனுடைய பொறுமையைச் சோதிக்கிறது.

'மாட்டே போகமாட்டே' ஆவேசத்துடன் முதுகில் ஒரு அறை

'அம்மா...' இந்தச் சிறிய அறைக்கே இப்படி ஒரு அலறனா?

முத்து கருண்டு விழுகிறான்

"என்னடா... நடிக்கிறியா! கை ஓங்குகிறது

இனியும் மறைக்கக் கூடாதென்று அவன் உண்மையைக்

கூறிவிடுகிறான். முதல் நாள் ஆசிரியர் பிளேட்டினால் முதுகை உடைத்திருக்கிறார். ஊமைக் காயம். அவனது வேதனைக்கும் பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்ற பிடிவாதத்துக்கும் காரணம்.

பார்வதி ஆற்றாமையுடன் தலையில் அறைந்தபடியே மகனை வாரி அணைக்கிறாள் "நாசமாய்ப் போக... ஏன்டா உடனே எனக்கு சொல்லயில்லை. எண்ணெயாவது தடவி இருப்பனே...

"சொன்னா நீ அழுவியே"

அவளது இதயக் குலையை இறுக்கிப் பிடிப்பது போல் மகனை வாரி அணைக்கிறாள்.

பள்ளிக் கூடத்துக்குப் போகும் சிறுவர்களை ஆதரவாக அரவணைக்க வேண்டிய ஆசிரியர்களை அடித்துத் துரத்துவதா? தனது சமூகம் தலைநிமிர்ந்து விடக்கூடாதென்பதற்காக ஆசிரியர்கள் செய்யும் தந்திரமோ என்றுகூட நினைத்துப் பார்த்தாள். கூடவே தன் மகனைப் படிக்கவைத்து ஆளாக்க வேண்டும் என்ற அவள் கனவுகளும் பிடரி பிடித்து உந்த "இங்கை விடு நான் கேட்கிறேன்" என்று அவள் சீறிக் கொண்டு புறப்பட்டாள். புயலாகத்தான்.

முத்துவுக்கு ஒரு விடுதலை. நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். முதுகின் வேதனையெல்லாம் அப்போதே ஆறிவிட்டது போல்... ஒரு சுகம்.

கடற்காற்று எல்லாவற்றையும் வாரி அடிப்பது போல் வீசுகிறது. குடிசையை விட்டு எழுந்து வெளியே வருகிறான் முத்து: பறந்து வரும் மணல் துகள்கள் முள்ளாகக் குத்துகின்றன; ஊரிகள் காலைக் கடிக்கின்றன. கடல் மணத்துக் கொண்டிருந்தது. கரையோரம் கிடந்த கல்மீது வந்து அமர்ந்தான். அம்மா பள்ளிக்கூடம் போய்விட்டாள். தன்னை முதல் நாள் அடித்த ஆசிரியருக்கு நல்ல பூசை கிடைக்கும்' அந்தப் பூசையே தானோ மறுநாளோ அவன் பள்ளிக்கூடத்துக்குப் போகும் போது தன்மீது திரும்பும்... நினைத்துப் பார்க்கவே நடுங்குகிறது மனம்.

கடலினுள்ளே உழைத்துக் கொண்டு அவனது உறவினர்கள் வள்ளங்களிலே அலைகிறார்கள். அவனுக்கும் ஆசையாக இருந்தது. ஆனால் பார்வதி தான் பிடிவாதமாக இருக்கிறாள்; தன் கணவன் உயிர்விட்ட கடலின் மடிமீது பிள்ளையையும் அனுப்புவதில்லை என்று. அப்படி இப்படியென்று கூலிவேலை செய்து மகனைப் படிப்பித்து ஆளாக்கியே தீருவதென்று அவளது இலட்சியம் ஒரே இலட்சியம்.

முத்துவுக்கோ பள்ளிக்கூடம் கசக்கிறது. கடல் மடியில்தான் அவனுக்கு ஒருகாதல். இவனைவிடச் சிறியவர்களெல்லாம் வள்ளத்திலே பெரியவர்களுடன் உதவிக்குப் போய் பழகுகிறார்

கள். தானும் போனால் என்ன? என்று எண்ணினான்; அந்த ஆசைக்கு ஊறுக்காக தாய் பள்ளிக்கூடத்துக்கு விரட்டுகிறாள். கடற்காற்று சிறிவந்து அவனோடு மோதியது. மனம் மயந்த உற்சாகம் மீண்டும் பிடிபட்டது. உரத்துக் குரலெழுப்பிப் பாடத் தொடங்கிவிட்டான்.

'பள்ளிக்குப் போனால் பள்ளிவவர் அடிப்பார் கோயிலுக்கு போனால்கோயில்வர் அடிப்பார்' மீண்டும் மீண்டும் இந்த இரண்டு அடிகளையே அவன பாடினான் இராகத்துடன் பாடிக் கொண்டேயிருந்தான்.

அன்று வெள்ளிக்கிழமை

பார்வதிக்கு அதை நினைக்கும் போதெல்லாம் கட்டுக்கடங்காத கோபம் பிறக்கும் இப்போதெல்லாம் இளைஞர்கள் கோயில் என்ற ஒன்று இருப்பதையே மறந்துவிட்டவர்கள் போலத்தான் இருக்கிறார்கள் வருடத்துக் கொருமுறை திருவிழாவில் அதுவும் கூத்து கும்மாளம் ஏதும் இருந்தால்தான் எண்ணிப் பார்க்கிறார்கள். தான் கண்ணுலை காணுகின்ற இன்னத்தனங்களுக்கு அதுதான் காரணம் என்று உள்ளூரத்திட டிக் கொள்வாள பார்வதி.

அப்படியே தன் மகனும் வளர்ந்துவிடக்கூடாது என்பது அவளது ஆசை. விடிந்ததும் விடியாததுமாக மகனை எழுப்பி குளிக்கச் செய்தாள்; அவனது அடம்பிடித்தலை வென்று அவனை வெளிக்கிடுத்திவிட்டு "ம்... கோயிலுக்கு போயிற்று வா...' என்று நிம்மதியுடன் நிமிர்ந்தாள்.

இப்போது ஐயர் வரும் நேரமாகிவிட்டது; பூசை தொடங்க 'டாண்' என்று தன் மகன் போய் தரிசனம் காண வேண்டும். அந்த தரிசனத்தின் தெய்விய ஒளியில் தன் மகனின் வாழ்வு வெளிச்சமாக வேண்டும் என்பது பெற்றவளின் ஆசை.

முத்து சிணுங்கிக் கொண்டு நின்றான்.

'கோயிலுக்கு போவன்டா'
'ம்...' அவனிடம் முனகல்
'பூசை தொடங்கிவிடப் போகுது... ஓடு ' அவளிடம் அவசரம். முத்து அப்போதும் சிணுங்கிக் கொண்டே நட்ட மரமாக நின்றான்.

'ஒரு தரிசனம் கண்டால் ஆயிரம் கோடி புண்ணியம் கிடைக்கும்... ஓடு ராசா என்ற கண்ணில்ல' பார்வதியிடம் பக்தியின் மிதூரம்!

கடற்கரைக்கு மீன் வியசபாரத்துக்குப்போகும் அவசரத்தில் தனக்குக் கிடைக்காத தரிசனம் மகனுக்காவது கிடைக்கட்டுமே என்ற ஆசை.

"மாட்டேன்" அவன் பிடிவாதமாகக் கூறினான்.

"மாட்டாய்..."

''மாட்டேன்னு மாட்டேன்''

ஆவேசம் வந்தவளாக அவள் அடிப்பதற்குக் கையோங்கும் போதே வாய்விட்டு அழத் தொடங்கிவிட்டான் முத்து. தாய்மையின் பாசம் பார்வதியிடம் பீறிட்டுப் பாயும் போதும் கோயிலுக்குப் போகமல் விடுவதற்காக அவனது நடிப்போ என்ற சந்தேகமும் மூந்துகிறது.

''பள்ளிக்குத்தான் போகமாட்டே... கோயிலுக்குப் போறதுக்கும் வருத்தமா?''

''மாட்டேம்மா... கோயிலுக்கு போனு உள்ளே வராதேன்னு கோயில் மூதலாளி அடிக்கிறாரு'

அவள் பெருமூச்சு விடுகிறாள் தனது அனுபவத்தை பிள்ளை மீது பொருத்திப் பார்க்காத குற்றத்தை உணர்ந்த பெருமூச்சு

'நாமெல்லாம் கோயிலுக்குள்ள வரப்படாதாம் குறைஞ்ச சாதியாம்... ஏனம்மா நாங்க எதில குறைஞ்சு போனம்''

பார்வதி மகனை கட்டிக் கொண்டு அழுதாள் மகனுக்கு பதில் சொல்ல வகை தெரியாது அழுதாள். அம்மா அழுவது அவனுக்கு உடன் பாடில்லை. கண்களைத் துடைத்து விட்டான்

பார்வதி மகனை வீட்டிலேயே விட்டு விட்டு துறைமுகத்தை நோக்கி புறப்பட்டு விட்டாள்; மீன் வியாபாரத்துக்கு. வயல் பகுதிகளில் வேளாண்மை முடிந்து விட்டதால் இப்போது அவளுக்கு கூலிவேலை இல்லை. மீன் வியாபாரத்தில் தான் காலம் ஓடுகிறது கடற்கரையோரம் இருக்கும் அவனது குடிசையில் இருந்து அந்த ஓரமே முக்கால் மைல் நடந்து வந்தால் துறைமுகம் வந்து விடும். துறைமுகத்துக்கு வந்தவள் முடிச்சை அவிழ்த்து பணத்தை விரித்தாள் கரையேறும் போதே மீனை வாங்கியவளின் வியாபாரம் தொடங்கி மும்முரமான வேளை—

''பார்வதி... எத்தனை நாளைக்கு உன்னை கசக்கி மகனுக்கு சாப்பாடு போடப் போறாய் அவனைத் தொழில்ல இறக்க வேண்டியது தானே ''என்று கேட்டார் மாரிமுத்து.

'என்ன சொல்லிறீங்க.. என்ர மகனை நான் படிக்க வைக்கப் போறன். நம்மட ஆக்களுக்குள்ள பெரியவனாக்கப் போறன்'

தாயின் ஆசைகள் வார்த்தைகளாக மலர்ந்தன.

''சும்மா கதையைவிடு பார்வதி நாம எங்கட பிள்ளையளைப் படிக்கவைக்க நினைச்சாலும் வாத்தியார்மார் விடமாட்டாங்கள்... எல்லாம் அவங்களட்ட இருக்கு, நம்மட்ட இந்த வலையும் கடலும்தான் இருக்கு''

''அதையும் பார்க்கிறன்' மீன் அளைந்த கையாலேயே தலையை வாரி முடித்து பார்வதி சபதம் ஏற்றவேளை...

இங்கே குடிசை முற்றத்தில் அமர்ந்திருந்து பாடிக்கொண்டிருந்தான் முத்து. அதே இரண்டு வரிகள் அவனது நெஞ்சத்தின் ஆழத்தில் புதைந்துவிட்ட வரிகள்,

''பள்ளிக்குப் போனால் பள்ளியவர் அடிப்பார்— கோயிலுக்குப் போனால் கோயிலவர் அடிப்பார்''

★

# அந்தநாள் வாராதோ?

சுமதி அருள்பிரகாசம்

கடன் பட்ட அவன்நெஞ்சம் அனலாகக் கொதித்திருக்க
கண்துயிலைக் களைகளவன் விழிவழியே நீர்பெருக
கடன்கொடுத்த சீமானே கட்டிலிலே சாய்ந்திருந்து
பண்ணோடு பாலருந்தும் நாளதுதான் மாறுதோ!

★ ★ ★

வட்டிபோட்ட குட்டி ஒருதொகையாகப் பெருகையிலே
பருத்தவுடல் பஞ்சணையில் புரளும் நிலைமாறி
சட்டியிலே சோறெடுத்து சமைத்தவனே வயிறாற
உண்டு களிக்கும் அந்தநாள் வாராதோ!

★ ★ ★

ஏர்பிடிக்கும் ஏழையவன் மனம்வருந்தி வாடிநின்று
கூழ்குடித்து உயிர்காக்கும் பரிதாப நிலையிருக்க
கார்பிடித்து உலவிவந்து உண்டகளைப்பாறுகின்ற
பாழ்பட்ட நிலைமைதான் மாறும்நாள் வாராதோ!

★ ★ ★

வாழ்க்கைச் சுமையதனுல் ஏழையவன் தவித்திருந்து
தேனத்தாக் கண்ணீர் கங்கையினில் தத்தளிக்க
வாழ்வினிலே சுகபோகம் பெருக்கவெண்ணும் சீமானவன்
சீர்வரிசை நாடிநிற்கும் இழிநிலையும் மாறுதோ!

# உங்கள் பார்வையில்

தாங்கள் சஞ்சிகை ஆரம்பிப்பதை அறிந்து மகிழ்ச்சி. சமூகத்தின் சின்னத்தனங்களுக்கெதிராக தாங்கள் குரல் கொடுப்பீர்களென்பது எமது நம்பிக்கை.

மனதை அரித்துக் கொண்டிருந்த ஒரு விடயத்தை எழுதுகிறேன், பிரசுரிப்பீர்களா ?

இன்று தமிழகத்திலிருந்துவரும் நூல்கள் சஞ்சிகைகளுக்கு நாணய மாற்று வீதமென்ற போர்வையில் அதிக விலையிடப்படுகிறது. தமிழக நிறுவனங்களிடமிருந்து கொள்விலைக்கு புத்தகங்களை வாங்கி அதனை விற்கின்ற விலையின் இருமடங்குகளாக அண்மைக் காலம் வரை விற்றார்கள். இன்றோ அந்த இருமடங்கோடு இருமடங்கின் அரைவாசி தொகையும் சேர்த்து விலை குறிக்கப்படுகிறது. இவ்வாறே பகற்கொள்ளையினால் தரமான இலக்கிய வெளியீடுகளைப் படிக்க வேண்டுமென்ற எமது ஆர்வம் மழுங்கடிக்கப்படுகிறது.

— கனக — கருநந்தி

கொழும்பு - 9

''தேன்கூடு'' வெளிவருவதை அறிந்து மகிழ்ச்சி. இளம் எழுத்தாளர்கட்கு தகுந்த களம் அமைப்பீர்களென எதிர் பார்க்கிறோம்.


கண்டி — தயாமதி சுப்பிரமணியம்

தரமான இலக்கிய ஆக்கங்களோடு அரசியல் தத்துவார்த்தக் கட்டுரைகளையும் பிரசுரியுங்கள்

யாழ்ப்பாணம் — எஸ் - ராஜலிங்கம்

திடீரெனவந்து திடீரெனச் செத்து மடிகின்ற ஈழத்து தமிழ்ச் சஞ்சிகைகள் வரிசையில் ''தேன்கூடும்'' இடம் பெறுதென நம்புகிறோம்; ''தேன்கூடு'' சிறப்புற வெளிவர எமது ஒத்துழைப்பு என்றும் உண்டு.

கொழும்பு பல்கலைக்கழகம் — ஆர்; ஜெயமனோகர்




# மாமியார் வீடு விமர்சனம்

பாரதிகாந்தன் :

இலங்கை இந்தியக் கலைஞர்களின் கூட்டு முயற்சியாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 'மாமியார் வீடு 2 வது மாதமாகக் காட்சியளித்துக்கொர்ண்டிருக்கிறது. இலங்கை கலைஞர்களுக்குரிய இடம் மாமியார் வீட்டிலே கிடைத்திருக்கின்றது. முதன் முதலாக இலங்கைத் திரைப்படக் கலைஞர்களின், தொழிநுட்ப கலைஞர்களின் கை வண்ணத்தில் பண்பட்ட இந்தி நடிகர்கள் நடித்திருக்கின்றார்கள். இசை ஒளியமைப்பு, காட்சியமைப்பு, கலைத்துவம் ஆகிய அம்சங்களில் நம்பிக்கைதரவல்ல சில உச்சங்களை எட்டியுள்ள மாமியார்வீடு விமர்சத்துக்குள்ளாகும் தகுதியைப் பெறுகின்றது.

குடும்பத்து வறுமையைப் போக்கப் பட்டினத்திற்கு வேலை தேடிச் செல்லும் ஓர் இளைஞனின் கதையைச் சொல்லுகின்றது மாமியார் வீடு. வேலைக்கென முற்பணமாக அண்ணன் கடன்பட்டுக் கொடுத்த இரண்டாயிரம் ரூபாய் பணத்தையும் எமாற்றுப் பேர்வழியான போலி விளம்பரக்காரனிடம் ஒரே நாளில் இழக்கிறான் முரளி, நகரின் போலி மயக்கங்கள், அவலங்களின் மத்தியில் அலையும் அவன் நல்ல மனதிற்கும் உழைப்புக்குமேற்ற ஒரு வேலை கிடைக்கிறது. அண்ணன் கடனை அடைக்கவும், தன் குடிசை வீடு மாடியாகவும் ஆயிரக்கணக்கில் பணமனுப்புகிறான் முரளி. அண்ணனோ கடன் கொடுத்தவன் வலையில் வீழ்ந்து குடிகாரனாகிச் சீரழிகிறான். வீட்டைக் காணும் ஆவலில் கிராமத்துக்குத் திரும்பும் முரளி தாயின் மரண வீட்டையே நடத்தும் நிலைக்குள்ளாகிறான்.

இடைவேளை வரை இயல்யான நடை போடும் கதை. பின்னர் வழமையான 'போமிலாக் காட்சிகளை இடையிடையே சேர்த்துக்கொள்வதனால் வலுவிழக்கின்றது, இருந்த போதிலும் படத்தின் முடிவும், இடையிடையே வரும் கலையம்சம் நிறைந்த காட்சிகளும் மனநிறைவினைத் தருகின்றன,

கலையழகுடன் கூடிய சம்பவங்களைச் சித்தரிக்கும் மாமியார்வீடு சமூக பயன்பாடுள்ளதாயும் அமைந்திருக்கின்றது. சமூகத்தின் போலி மயக்கங்கள் ஏமாத்து வேஷங்கள், மதுப்பழக்கத்தின் தீமைகள் போன்றனவற்றை மிகத்துல்லியமாக காட்டுகின்றது.

யோகராஜாவின் கமராவும், ரொக்சாமியின் இசை வண்ணமும் படம் முழுதும் உயிரூட்டி நிற்கின்றன. இதுவரை வெளியாகிய இலங்கைத் தமிழ் திரைப்படப் பாடல்களின் குறைகளை நிவர்த்தித்து மனதில் நிறைகின்றன மாமியார் வீட்டின் பாடல்கள். யோசெப் ராஜேந்திரனின் 'ஊருக்கு ஒரு நாள்' சோகப் பாடல் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றது. 'டா, டு, டி' என வெளிவந்து கொண்டிருக்கும் இன்றைய தமிழக சினிமாப் பாடல்களின் மத்தியில் அர்த்தம் செறிந்த மாமியார் வீடு பாடல்கள் மகிழ்ச்சி தருகின்றன.

இவையனைத்திற்கும் மேலாய் நடிகர்களின் பொருத்தப்பாடு பாத்திரங்களின் உயிராய் சிறந்து நிற்கின்றது. பண்பட்ட நடிகரான எஸ். வி. சுப்பையாவை இன்னும் கொஞ்சம் அதிகமாய்படுத்தியிருக்கலாம். முதல் படத்திலேயே மனதில் நிலைக்கும் சிவகுமாரனை இனங்கண்ட வெங்கட் பாராட்டுக்குரியவர்தான்.

இத்துணை நிறைவுகளையும் தரும் மாமியார் வீடு படத்தொகுப்பின் போது சில முரண்பாடுகளுக்கும் இடந்தந்திருக்கிறது. இயற்கையான கதையமைப்பிலிருந்து விலகி 'போமீலா' நிலைமைகளைத் தழுவும் போதே இத்தகு குழறுபடிகளும் இணைகின்றன. இரண்டொரு வெளிப்புற காட்சிகளின் ஒளிப்பதிவும் 'ஓவர் எக்ஸ் போஸாகியிருக்கின்றது'

ஸ்ரீபத்துல, தமயந்தி போன்ற சிறந்த வெற்றிப்படங்களையளித்த வெங்கட், இலங்கைத் தமிழ்த் திரையுலகின் எதிர்கால நம்பிக்கையாக மாமியார் வீட்டைத் தந்திருக்கிறார் என்று கூறலாம். எதிர்காலத்தில் கதையில் அதிக கவனம் செலுத்தி நல்ல கலைப்படங்களை உருவாக்க வேண்டும். மேலும் சிவகுமாரன் போன்ற நல்ல நடிகர்களை இனங்கண்டு அறிமுகப்படுத்த வேண்டும். ஈழத்து திரைப்படங்களின் உயர்வுக்கும் வழிகாட்ட வேண்டும். இயக்குனர் கே. வெங்கட், உதவி இயக்குனர், கவிஞர் என். சண்முகலிங்கன் ஆகியோரிடமிருந்து திரையுலகம் நிறையஎதிர்பார்க்கின்றது.

★ ★ ★

---

திருமணம் செய்தவர்கள் மக்கள் சீனக்குடியரசில் தேன் நிலவு செல்லக் கூடாதென இருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது

# குப்பி விளக்கும் கப்பல் கார்களும்

வ. ஐ. ச. ஜெயபாலன்

வண்ண வண்ண சாந்துகளை
மதலை கொட்டி அழைந்து வைத்த
மேலைத் தொடுவானில்
இன்னும் ஒளி துலங்கும்,
பின்னேரம் சாகவில்லை.
பிறை முளைத்தபோதும்
முன்னிரவு இன்னும் முழுதாய் பிறக்கவில்லை
சில்லென்று தென்றல்
திரிந்து வரும் புல்வெளியின்
எல்லையிலே குந்தி
ஏகாந்தம் அனுபவித்தேன்.
தாழ்ந்து வரும் இருள் திரையை மீறி
இடமெங்கும் வியாபித்து
ஒல்லாந்தர் கோட்டை
எதிராகத் தலைநிமிரும்.
பின்னே பெருந் தெருவில்
போவோர் வருவோர்களின்
சந்தடிகள் ஓயும்;
விண் எங்கும்
காகம் வெண் கொக்கு இன்னபிற
நகரத்துப் பறவைகள்
புகலிடங்கள் தேடி
கோட்டை வான் பிரதேசக்
குறிச்சிக்குள் பெருக்கெடுக்கும்.
நகர்புறத்து வீதிகளில் யாரோடும் ஒட்டாது
தாமரை இலையின் தண்ணீராய்
வாழ்ந்து திரிந்து வந்து கிடக்கின்றேன்
முன்னாலில் வாழ்ந்த கிராமம்
வயல்புறங்கள்
இன்னும் என் நெஞ்சில்
எனதாகும்?
இந்த நகர்புறமோ?

விழுந்து கிடந்தாலும்
அந்நியனுய் விலக்கி
அப்பால் தொடர்ந்து செல்லும்
எல்லா விரக்திக்கும்
எவர்கால் என அறியோம்
முன்னேறும் நாடு
தொலைக்காட்சி அலைவாங்கி
கூரைகளில் தோன்றுவதும்.
வாழ்வு நாளில் காணுத
வகைகளெல்லாம் சந்தையிலே
வந்து குவிகிறது.
எண்ணவிலே தோன்றுமல்
எத்தனையோ வண்ணத்தில்
வாகனங்கள் வீதியிலே
வழியடைத்து செல்கிறதும்:
முன்னேறும் நாடு
நாங்கள் முன்னேருமல்
வீட்டிலே குப்பி விளக்கெரிக்க வகையற்றேும்
எல்லா விரக்திக்கும்
எவர்கால் என அறியோம்.
இருளிலும்
முன்னே தலைநிமிரும்
ஒய்லாந்தர் கோட்டையுள்ளே
தூக்குமேடை தலைதூக்கி
சிந்தனையை சிறகடிக்கும்

★ ★ ★

---

## காலங்கள் மாறும்

சமீபத்திய பத்திரிகைத் தலைப்புச் செய்திகள் கீழ்வருமாறு

- "சீன வங்கிக் லக்சம் பேர்க்கில் ஒரு கிளையை ஆரம்பிக்கப்போகிறது."

- "பிரான்ஸ் சீனுவுக்கு 70 கோடி டொலர் பெறுமதியான போர் விமானங்களை விற்பனை செய்யும்.

- "ஷங்கெய் தொல்பொருள் விற்பனை நிலையம் மீண்டும் வியாபாரத்தைத் தொடங்கிறது."

- "இன்ரகொன்ரினல் ஹோட்டல்கள் நிர்மாணிக்கும்."

நன்றி: — பொருளியல் நோக்கு

# ஈழத்து தமிழ் நாவல்களின் தோற்றமும் வெகுசன கலாச்சார சூழலும்

ஆ. சிவநேசச்செல்வன்

"மேலைத்தேசங்களில் கற்பனை நூல்கள் மிக அதிசயிக்கத்
தக்கவிதமாக முன்னேற்ற மடைந்துள்ளன. உயர்ந்த கற்பனு
சரித்திரங்களை எழுதும் ஆசிரியர்களும் மிகவும் கீர்த்தி பெற்றவர்
களாய்ப் பலர் இருக்கிறனர். நமது தாய் நாடாகிய இந்தியா
விலும் தமிழ் நாட்டில் அநேக கற்பனு சரித்திரங்கள் வெளி
வந்திருக்கின்றன கீர்த்தி பெற்ற ஆசிரியர்களாகவும் பலர் விளங்
குகின்றனர். தமிழக் கல்வி அபிவிருத்தியில் நம் தாய் நாட்
டோடு ஒப்புக் கூறத்தக்க முறையில் யாழ்ப்பாணத்தில் கற்பனு
சரித்திரங்களை இயற்றுவார் மிக அரிது. ஆங்காங்கே சில கற்
பனு சரித்திரங்கள் மட்டும் வெளிவந்துள்ளனவாகத் தெரிகிறது
யாழ்ப்பாணத்தில் உள்ள கல்வியாளர்கள் இம்முயற்சியில் ஈடுப
டாத காரணம் யாதோ தெரியவில்லை"

என காந்தமலர் அல்லது கற்பின் மாட்சி என்ற கி. வே. தாமோ
தரம்பிள்ளையின் நாவலுக்குப் பதிப்புரை எழுதிய சோதிட பரிபா
லினி பத்திரிகை ஆசிரியர் சி. இ. இரகுநாதையர் 1936 ஆம் ஆண்
டில் குறிப்பிட்டுள்ளார். இரகுநாதையருக்கு ஏற்பட்ட ஆசங்கைக்கு
விளக்கமாகச் சில கருத்துக்களைத் தொடுத்து நோக்குவது அவசிய
மாகும். ஈழத்தின் ஆரம்ப கால நாவலாசிரியர்களான சித்திலெவ்
வை, இன்னுசித்தம்பி சரவணமுத்துபிள்ளை முதலியோரில் முன்ன
வர் கண்டியையும், பின்னவரிருவரும் திருகோணமலையையும் சேர்ந்
தமை குறிப்பிடத்தக்கது. கல்வி கேள்வி வல்லோர் நிறைந்திருந்த
யாழ்ப்பாணத்திலிருந்து ஏன் அதிகம் நாவல் எளவில்லை என இர
குநாதையருடைய மனதிலே தோன்றிய கேள்விக்குறி நியாயமான
தொன்றேயாகும். வெகுசன கலாச்சாரத்தோற்றதின் பிரதான
அக்கியான புத்தக உலகம் பற்றிய சிந்தனைகளையும், அவை சாதா
ரண பொதுமக்களை அடைய வேண்டும் என்ற உணர்வையும் கொண்
வர் இரகுநாதையர். அச்சியந்திரத்தின் பூரண பயன் பாட்டை
உணர்ந்த நிலையில், சோதிட பரிபாலினி, என்ற தேசோபகாரம்
கருதிய பத்திரிகையை வெளியிட்டு வந்தவுடன், தமது நிறுவனத்
தில் காத்திரமான இலக்கிய நூல்களை வெளியிடும் பிரசுரகத்தாவாக

வும் விளங்குமிவர் உரை நடை சாதனத்தின் முழுமையான பயன் பாட்டை உணர்ந்து செயலாற்றிய பலருள் ஒருவருமாவர் இலக்கிய மரபுத் தொடர்ச்சியை உணர்வு பூர்வமாக விளங்கிய நிலையிலேயே நாவல் என்ற இலக்கிய வடிவம் தமிழிலே காவிய புராண வடிவத் தொடர்பாக பொதுமக்களுக்குப் பல விடயங்களைத் தெரியப்படுத் தும் நோக்கில் எழுந்தது என கூறியுள்ளார். குறிப்பாக இரகுநா தையர் மேலே குறிப்பிட்ட தமது பதிப்புரையின் ஆரம்பத்தில் இவ்வுண்மையை பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளார்:

> ''உலகத்தில் மக்களது அறிவுவிருத்திக்குக் காரணமாயுள் ளவை நூல்களேயாகும்; இந்நூல்கள் நீதிகள், ஒழுக்கங்கள் முதலியவற்றைக் கூறுவனவாகும், கதை ரூபமாக அவற்றை விளக்குவனவாகவும் இருவகைப்படும்; திவிர அறிவு வாய்ந்த வர்களுக்கேயன்றிச் சாதாரண அறிவுள்ள பொதுமக்கள் எவருக் கும் நீதி நெறிகளை நேரே கூறும் நூல்களிலும் பார்க்கக் கவி தைகள் மூலமாக அவற்றை கூறும் நூல்கள் எளிதில் உணரக் கூடியனவாக இருக்கின்றன; இது பற்றியே முற்காலத்தில் புரா ணங்களும் காப்பியங்களும் அறிஞரால் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் அவைகள் செய்யுள் வழக்கிலே இருந்தமையால் அவற் றைப் பொதுமக்கள் அறியும்படி விளக்கிக்கூற கல்வி அறிவு வசன ரூபத்திலும் நூல்கள் ஆக்கப்படிவனவாயின. இவ்வாறு கப்படும் வசன நூல்களின் கதைகள் சில உண்மையானவை களாயும் சில கற்பிதங்களாயும் இருக்கும்; கற்பிதங்களாக எழு தப்படும் நூல்கள் தற்போது நாவல் என்னும் ஆங்கிலப்பதத் தால் வழங்கப்படுகின்றன.''

அக்காலத்தில் இரகுநாதையர் உணர்ந்த மரபு மாற்றம் வெகு சன கலாச்சார தோற்றத்தின் விளைவாக உருவாகியது எனலாம்;

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலாகப் படிப்படி யாக ஏற்பட்டு வந்த சமூக பொருளாதார கலாசார மாறுபாடுகள் ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியத் தோற்றத்திற்கான பின்னணியை உருவாக்கின. மேலைப்புலச் சிந்தனைகளைத் திட்டமிட்ட வகையிலே பரப்புவதன் மூலம் தமது ஆட்சியை உறுதிபடுத்த முயன்ற ஆங்கி லேயர் பரந்து பட்டகல்வி வளர்ச்சியை உருவாக்கும் நோக்கமாக சமய நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்தனர். சமய நிறுவனங்கள் முன்னின்று உருவாக்கிய பாடசாலைகள் நாடெங்கும் சமயப் பிரச் சார பணியிலான கல்வி மலர்ச்சியை ஏற்படுத்தியதுடன் படிப்படி யாகக் கல்வி வல்ல உயர்ந்தோர் குழாத்தினரையும் உருவாக்கி வந் தன, எழுத்தறிவு பெற்ற நிலையிலே புதிய மாற்றங்களை எதிர் நோக்கிய பலரும் மாறிவரும் சமூக வடிவங்களைக் கூர்ந்து அவதா னிக்க முயன்றனர். சமூகத்திலே ஏற்படும் மாற்றங்களை நெறிப்ப

டுத்துவதும் தீயனவற்றைக் கண்டிப்பதும் தமது தலையான பணிகள் என்பதை இவர்கள் உணரத்தலைப்பட்டனர்; பரந்த அடிப்படையிலான கல்வி அறிவைப் பெற்றவர்களுடைய சிந்தனையிலே ஐரோப்பிய இலக்கியத்தொடர்பு புதுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது.

மிசனரித் தொடர்பினாலும், ஆங்கிலக் கல்வியாலும் நாடெங்கும் உருவாக்கிய புதிய மத்திய வர்க்கத்தினர் பல்வேறு வளர்ச்சிகளிலும் அக்கறை செலுத்தத் தலைப்பட்டனர். பாரம்பரியக்கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றமும் தேசிய சமய நிறுவன இயக்கங்களும் மக்களிடையே ஏற்படுத்திய விழிப்பு தனி மனிதனுக்குச் சமூகத்தில் உரிய முக்கியத்துவத்தை ஏற்படுத்தியது. நாட்டின் நிருவாக விடயங்களிலும் வளர்சிகளிலும் அக்கறை கொண்ட இம்மத்திய வர்க்கத்தினர் கலா சாரச் சீர்குலைவைக் களைந்து சமூகத்தை நெறிப்படுத்த முயன்றனர். பயன்பாட்டு நோக்கிலே ஆரம்பம் முதல் புகுத்தப்பட்ட கல்வி முறை பாரம்பரியக் கலா சாரத்தை சீரழிப்பதையும் அதே நேரத்தில் மாற்றங்களை உருவாக்குவதன் மூலம் மலர்ச்சி ஏற்படுத்துவதையும் உணர்ந்த மத்திய வர்க்கத்தினர் மிசனறிமார் பயன்படுத்திய வழிவகைகளைக் கையாண்டு புதிய துறைகளில் உழைக்கலாயினர்,

குறிப்பாக தமிழிலே 1841 ஆம் ஆண்டு முதலாகத் தோன்றிய பத்திரிகைகளிலே எழுச்சி பெற்ற மத்திய வர்க்கத்தின் அபிலாசைகளை உணர்த்துவனவான விடயதானங்கள் காணப்படுகின்றன. உதயதாரகையின் முதலாவது இதழில் இருந்தே வாசனைப் பயிற்சியில் ஆர்வம் ஏற்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது: துறைபோகக் கற்றோர் மட்டுமன்றி சாதாரண கல்வி அறிவு பெற்ற மற்றோர்களுக்கும் புரியும் வகையில் பத்திரிகைகளில் எழுத முயன்றனர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏறத்தாழ 25க்கு மேற்பட்ட தமிழ் புதினப்பத்ரிகைகள் நாடெங்கும் காலந்தோறும் தோன்றின. குறிப்பாக இலங்கை காவலன் இலங்காபிமானி, புதினதிபதி, புதினாலங்காரி, முஸ்லீம் நேசன் போன்ற பத்திரிகைகள் பொதுமக்களின் வாசனை ஆர்வத்தை தூண்டும் வகையில் இயங்கின

கல்வி வளர்ச்சியின் வழியிலான வாசனைப் பழக்கம் பத்திரிகைப் பின்னணியிலே உறுதி பெற்றது: சுருங்கக் கூறின் நாவலிலக்கியத் தோற்றத்திற்கு இன்றியமையாத கல்வி வளர்ச்சியும் வாசனைப் பழக்கமும் உருவாகின. தனிமனிதனின் உள வளர்ச்சியையும் சமூக ஆற்றலையும் உறுதிபடுத்தும் நாவலிலக்கியத் தோற்றத்திற்கான தேவையும் பலராலும் உணரப்பட்டது.

இலங்கையர் மத்தியில் ஆங்கில நாவல்களை வாசிக்கும் பழக்கம் ஏற்பட்டமைக்குக் குறிப்பாக செய்தித்தாள்கள், இலக்கியச் சஞ்சிகைகள் பொதுக்கூட்டங்கள் சமயத்துண்டுப் பிரசுரங்கள் ஆதியன மத்

திய வர்க்கத்தினருக்குக் கிடைத்தமையும் அவதானிக்கத்தக்கது ஆங்கில வாழ்க்கையையும் மரபுகளையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியில் நாவல்கள் ஆங்கிலம் கற்றவர்களால் வாசிக்கப்பட்டு குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு நடுக்கூறு முதல் ஆங்கில நாவல்களின் செல்வாக்கு இவ்வாறாக அதிகரித்து வந்தது.

ஈழத்தில் 1920 ம் ஆண்டில் இலங்கை இலக்கிய சங்கம் என்ற பெயருடன் ஒரு சங்கம் உருவாகியது. இது பின்னர் இலக்கிய விவசாய சங்கமாக மாறியது. ஈழத்தவரின் பல்துறை ஆற்றல்களை வளர்க்கும் முகமாக பல்வேறு இலக்கிய சமய விடயங்கள் இங்கு விவாதிக்கப்பட்டன. 1836 ஆம் ஆண்டிலே பிற்றர்பேர்சிவல் பத்துப் பேர்களைக் கொண்டு இச்சங்கம் அமைந்திருப்பதாகவும், பொது மக்களை வழிப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களைக் கொண்ட இச் சங்கம் பல சமூக முன்னேற்ற விடயங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். 1845 ஆம் ஆண்டில் இலங்கையில் ஆரம்பமாகிய றோயல் ஆசிய சங்கக் கிளை இலக்கியம், வரலாறு கலை சம்பந்துமான விடயங்களை ஆய்வு செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தியது, இதே காலகட்டத்தில் ஆங்கிலேயருடன் சமமாக ஈழத்தவரும் ஆய்வுத்துறையில் ஈடுபட முனைந்தனர். றோயல் ஆசிரியசங்கத்தவரும் ஈழத்துச் சமகாலப்பிரச்சனைகளில் அதிக ஆர்வம் காட்டினர். இச்சங்கத்தைச் சார்ந்தோரது ஆய்வுகளும் சுதேசமேலவர்களுக்கு ஆதர்சமாகவும் வழிகாட்டியாகவும். அமைந்தன: ஆங்கில மரபு வழி சுதே இலக்கியங்கள் உருவாகுவதற்கு இவையாவும் மறைமுக உந்து சக்தியாக அமையலாயின,

இவ்வாறான சூழ்நிலையில் ஐரோப்பிய இலக்கியங்கள் குறிப்பாக நாவல்கள் நூல் நிலையங்கள் மூலமும் பல்வேறு விற்பனை நிறுவனங்கள் மூலமும் ஈழத்து வாசகர்களுக்கு கிடைத்து வந்தன. 1814 ம் ஆண்டு வரையில் கொழும்பில் உள்ள கரிசன் விநியோக நூல்நிலையம் ஈழத்தவருக்கு நாவல்கள் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது, படிப்படியாக நகரங்களிலே தோன்றிய நூல்நிலையங்களிலே நாவல்களும், பிரித்தானிய மாசிகைகளும், பத்திரிகைகளும் அங்கத்தவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது, 1840 ஆம் ஆண்டு வரையில் கொழும்பு பெற்றா நூலகம், காலி வாசிகசாலை, திருகோணமலை வாசிகசாலை இரத்தினபுரி நூல்நிலையம் கண்டி ஐக்கிய சேவை நூல்நிலையம் ஆகியன முழு மூனைப்புடன் இயங்கி வந்தன இவ்வாறாக வாசகர் பெருக்கத்தையும் சிந்தனை விரிவையும் பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏறத்தாழ பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறுமுதல் படிப்படியாக அதிகரித்து வந்தன. ஈழத்தின் ஆரம்பகால நாவலாசிரியர்களான சித்தி லெவ்வை இன்றாசித்தம்பி, சரவணமுத்துப்பிள்ளை ஆகியோர் கண்டி, திருகோணமலையில் உருவாகியமைக்கு அப்பிர

தசத்தில் ஏற்பட்ட நூல்நிலைய வசதியும் பின்னணியும் ஒரு கார ணமாக இருக்கலாம்; நகரப்பின்னணியிலே நாவல்களைப் பெறும் வாய்ப்பும் வசதியும் அதிகம் காணப்பட்டது. யாழ்ப்பாணத்திலே

இவ்வகை நூலக வசதி அதிகம் இருந்ததாகத் தெரியவில்லை. குறிப் பாகச்சித்தி லெவ்வை கொழும்பிலும் கண்டியிலும் இயங்கியமையும் இவ்விடங்களில் இருந்த வாசக சேவை நூலகங்களும் கல்வி அறிவு பெற்றோருடைய நாவல் வாசிக்கும் ஆர்வமும் இவர்களை கவர்ந்து இருக்கலாம்; திருகோணமலையிலும் ஆங்கிலேய இலங்கைக் கலாச் சாரம் அதிகம் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது: இராகுநா தையர் குறிப்பிட்ட தாய் நாட்டுப் பிரச்சனைகள் ஒரு புறம் இருக்க யாழ்ப்பாணத்தில் உள்ள கல்வியாளர் இம்முயற்சியில் சற்று பிந்திய நிலையில் நாவல் முயற்சிகளில் ஈடுபட்டமைக்கு இதுவே காரணமாக வும் இருக்கலாம்.

சித்திலெவ்வை இஸ்லாமிய மலர்ச்சியை மனம் கொண்டு தொண் டாற்றியவர் 1882 ஆம் ஆண்டுலே முஸ்லீம் நேசன். என்ற பத்தி ரிகையை ஆரம்பித்தார். முஸ்லீம்களின் சமூகவிருத்தி, கல்விவிருத்தி மார்க்கவிருத்தி ஆகியவற்றிலிருத்தி அதிக கவனம் செலுத்திய சித்தி லெவ்வை 1885 ஆம் ஆண்டிலே அஸன்பே சரித்திரம் என்ற நாவலை எழுதினர். அஸன்பே சரித்திரக் கதாநாயகன் சுயமத ஆசாரங்களை பேணுபனவனுகவும் மார்க்க விடாங்களில் அதீத ஈடுபாடு கொண் டவனுகவும் படைக்கப்படுகிறுன். முஸ்லீம் நேசன் பத்திரிகையில் பொதுவாகச் சமூகத்தில் உருவாகி வந்த சிந்தனை வளர்சியைக் கல் விப் பின்னணியில் நெறிப்படுத்த விரும்பிய சித்திலெவ்வை நாவல் என்ற இலக்கிய வடிவத்தை பயன் படுத்த விரும்பியமை மக்களு டைய மனோ நிலையை மனம்கொண்டே எனலாம். முஸ்லீம் மக்களு டைய வாசிக்கும் மனோ நிலையையும் ஆர்வத்தையும் தாம் வாழ்ந்த சூழலிலேயே பத்திரிகைப் பின்னணியிலே நெறிப்படுத்திய சித்தி லெவ்வை வசன காவியம் மரபாகிய நாவலைப் பயன்படுத்தினர், இன் னுசித்தம்பியும், சரவணமுத்துப்பிள்ளையும் கூட தாம் வாழ்ந்த திரு கோணமலைப் பிரதேசத்தில் நூல் நிலையப் பின்னணியில் நாவல்களைப் பெற்று வாசிக்கும் ஆர்வத்தை அவதானித்து அவ்வடிவத்தைத் தமி ழிலே பயன்படுத்த முனைந்திருக்கலாம்.

ஈழத்திலே ஏற்பட்ட கிறிஸ்தவ சமய பிரசார வேகத்தின் வெளிப்பாடாகவும் ஆரப்ப கால நாவல்கள் அமைவது அவதானிக் கத்தக்கது. அஸன்பே சரித்திரம் - மார்க்கவிடயங்களுக்குக் கொடுக் கும் முக்கியத்துவமும், தொடர்ந்து கிறிஸ்தவ பின்னணியில் மங்கள நாயகம் தம்பையாவின் நொருங்குண்ட இதயம், சாள்ஸ் ஸ்கின்னி யின் தேம்பாமலர், ஞானபூரணி வரை இம்மரபு வளர்வதும் மன்னி

கொள்ளத்தக்கது. சமர்ப்பிரசாரம் மட்டுமின்றி அதனோடு, ஒழுக்க மரபும் பேணி, இடைக்காடர் திருஞானசம்பந்தபிள்ளை போன்றோர் எழுதிய யாவும் அவதானிக்கத்தக்கவை ஈழத்து நாவல்களின் தோற்றம் ஒருவகையில் சமய அடிம்படையிலான சமூகச் சீர்திருத்த மரபை நோக்கி உருவாகியது எனலாம். இந்த வகையில் க. கைலாசபதியவர்கள் கூறும் பின்வரும் கருத்து மனங்கொள்ளத்தக்கது.

> ''பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இலங்கையில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியின் ஓர் அம்சமான சைவ மறுமலர்சியின் ஓர் அம்சமான சைவ மறுமலர்ச்சியின் விளைவாகவும் அச்சமய மறுமலர்ச்சிக்கு ஏதுவாகவிருந்த சமூக பொருளாதாரக் காரணிகளின் விளைபொருளாகவும் வலிமைவாய்ந்த அறிவியக்கமொன்று முகிழ்த்தது. அது பல துறைகளில் பயனளித்தது. நாவலிலக்கியம் அப்பேறுகளில் ஒன்று''
>
> (தமிழ் நாவலிலக்கியம் பக்: 240)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் இருந்து வளர்ந்து வந்த பத்திரிகைகளுக்கும் பிற தொடர்பு சாதனங்களும் உரைநடை மரபின் செல்வாக்கை நன்கு விரிவடையச் செய்தன அச்சுக்கலையை நன்கு பயன்படுத்த முனைந்த நிலையிலே விரிவடைந்த உரைநடைமரபு பத்திரிகை மரபின் அடிப்படையிற் பண்பட்டது; காலப்போக்கில் பத்திரிகை நடையின் பின்னணியிலே ஆக்க இலக்கிய மரபு நெறிப்படுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் உரைநடையை லாவகமாகக் கையாளும் வல்லமை பொருந்தியவர்கள் உருவாகியது மட்டுமின்றிக் கற்றவர்க்கு மட்டுமின்றி மற்றையவர்களும் எழுத வேண்டிய தேவையும் உணரப்பட்டது. குறிப்பாகப் பத்திரிகைகள் உருவாக்கிய வெகுசன கலாச்சாரச் சூழல் நாவல் இலக்கியத் தோற்றத்திற்குச சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது சித்திலெவ்பை முஸ்லீம் நேசன் பத்திரிகையைத் தொடங்கி இரு ஆண்டுளுக்குள் அசன்பே சரித்திரம் எழுதியமையும் அவதானிக்கத்தக்கது.

சுருங்கக் கூறின் ஈழத்து நாவலிலக்கியத் தோற்றம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெகுசன கலாச்சார அறிவு நிலையச் சூழலின் தர்க்க ரீதியான வளர்ச்சியாக உருவாகியது என்லாம். ★

கடந்த மாதம் ஈரானிலுள்ள நீச்சல் குளத்தின் அருகே சிரித்துக் கொண்டிருந்த காரணத்திற்காக மூன்று இளம் பெண்கள் கைது செய்யப்பட்டார்கள் இதற்கான தண்டனையாக ஆளுக்கு தலா நாற்பது சாட்டையடி கொடுக்கும்படி தீர்ப்பாகியது எனினும் அப்பெண்களில் ஒருத்தியின் உறவினர் புரட்சி நீதி மன்றமொன்றின் முக்கிய உத்தியோத்தராக இருந்ததால் சமாளித்து விட்டாராம்.

# உத்தமத் தந்தை!

பத்மராணி மகேசு

அவர்கள் என் பிள்ளைகள்
ஆசையுடன்தான் பார்க்கிறேன்.
வீடுஎன் பொறுப்பில்நான்
விரும்பிய வசதிகள் எல்லாமுண்டு,
காவலுக்கும் ஆட்களுண்டு.
கட்டளைகளும் நிறையவுண்டு.
உள்ளேயுள்ள வசதிகள் பிள்ளைகளுக்கு விளங்கவில்லை
வெளியே புதியவுலகைப் பார்க்கவேண்டுமாம்.
காவலையுடைத்து கட்டிடத்தைத் தகர்க்க வேண்டுமாம்
கவனிக்காமல் நானு மிருக்கமுடியுமா?
காவலெல்லாம் கடினமென்கிறார்கள்.
கனக்க ஏதோ முனகுகிறார்கள்
சந்தோசமே யிங்குதான் குடியிருக்கே
சத்தமெதுவும் வெளியில் கேட்கவில்லையே
பிள்ளைகளுக்காக இரக்கப்படுகிறேன்.
தபிடியைத் எர்த்த என்னால் முடியாது!


விரைவில் வெளிவருகிறது!

# வாகை

கலை இலக்கிய விமர்சன இதழ்.

தொடர்பு: 23, நாவலர் வீதி,
நாவான்துறை, யாழ்ப்பாணம்.

# நிழல் உறங்கும் வழிகள்

## நாவலிலிருந்து.........

......தன்னை நம்பியுள்ள மூன்று ஜீவன்களைக் காப்பாற்ற வேண்டும். மடியில் கட்டப்பட்டிருக்கும் நெருப்பாய் நிற்கும் தங்கையை யார் கையிலாகிலும் தள்ளியாக வேண்டும்; தன் படிப்பிற்காக தந்தை வாங்கிய கடன் சுமை இரண்டாயிரம் ரூபாவை இறக்கியாக வேண்டும்; எனவே ஒரு வேலை கிடைத்தாக வேண்டும்.

தான்கற்ற கல்வியை ஞானு நம்புகின்றான் அந்தக் கல்வியோ தனக்கேற்ற வேலை கிடைக்குமென்று நம்புகிறது; வீட்டில் ஒடுங்கிக் கிடக்கும் ஜீவன்களோ அந்த வேலையை நம்புகிறது ஆனால் —

வேலையோ இவனை நெருங்க மாட்டேன் என்கிறது; அது லட்சுமியிடம் சேர்ந்த பிறகு ஏழை சரஸ்வதியிடம் எப்படி வரும்?
பணம் கிடைத்தால்தால்தான் வேலை.

வேலை செய்தால் பணம் கிடைக்கும். அப்பா காலத்து தர்மம், பணம் கிடைத்தால்தான் வேலை கிடைக்கும்; ஞானு காலத்து தர்மம்.

பள்ளிக்கூடத்தில் காலியாக இருந்த இடத்தைப் போட்டுத் தருவதற்கு கேட்கும் தட்சிணை பத்தாயிரம் ரூபா!

ஈவிரக்கமோ, தர்மமோ, தயவுதாட்சண்யமோ இல்லையா? என்று திகைத்துப் போகிறோம்.

15 ஆயிரம் தருவதற்குப் பட்டதாரிகள் இருக்கின்ற போது 5 ஆயிரத்தைத் தியாகம் செய்து 10 ஆயிரத்தை மட்டுமே கேட்கிற தர்மவானை எங்கே பார்க்க முடியும் என்று மலைத்துப் போகிறோம்;

'கல்வித்தாபனங்கள் சரஸ்வதியோடது. அதை லேவாதேவி வியாரமா நடத்தறேள்? புனிதமான கல்வியின் பேரிலே இப்படிக் கொள்ளையடிக்கிறதை விட யாசிக்கப் போறது உத்தமம். லஞ்சத்தை வாய்கூசாமல் கேட்கிற இந்த வர்க்கம் வருங்காலத்தை உருவாக்கிற கல்விக்கூடத்தை நிரப்பிண்டிருந்தா இந்த தலைமுறைகாரர் கிட்டே என்ன ஒழுக்கத்தை கட்டுப்பாட்டை எதிர் பார்க்க முடியும்'......

நன்றி: ஜீவா

# அவர்கள் இன்னும் அரசியல் பேசுகிருர்கள்.

வ. யாதவன்

அதிகாலையில் கொழும்பை விட்டுப் புறப்பட்ட உதயதேவி மருதானையைக் கடந்ததும் சீரான வேகத்துடன் ஓட ஆரம்பித்தது; காலையில் நேரத்துடன் எழுந்ததால் ஏற்பட்ட சோர்வும், மெல்லிய இதமான குளிர் காற்றும் புகை வண்டித்தாலாட்டும் சேர்ந்து சுகமான நித்திரையை வரவழைத்தன. கண்களை மூடிக் கொண்டு நித்திரையை அனுபவிக்கத் தொடங்கினுலும் கண்கள் இடையிடையே என்னைச் சூழ உள்ளோரை நோட்டம் விடுகின்றன,

எனக்கு எதிரே நடுத்தர வர்க்கத்தினர் என்று பறைசாற்றக் கூடிய தோற்றம் கொண்ட லோங்ஸ் போட்ட ஒருவர், அவரருகில் அதே தோற்றத்துடனுன; தலைமயிர் சற்று நரைத்திருந்த ஒருவர்; மூக்குக் கண்ணுடி போட்டிருந்தார். எனக்கு வலது பக்கத்தில் ஓர் இளம் ஜோடி, தமக்குள் ஓர் உலகை உருவாக்கிக் கொண்டு மிக நெருக்கமாக அவ்வுலகில் இருந்தனர் புகைவண்டிப் பெட்டியில் இருந்த எல்லோரும் இந்த இளம் ஜோடியினரைக் கவனிக்க அவர்கள் எவரையுமே கவனியாது 'தம்' உலகில் இருந்தனர். எனக்குப் பின்னுல் சில தமிழ்க் குரல்கள் ஒலித்தன. அவர்களின் பேச்சுத் தமிழ் அவர்களை மட்டக்களப்பார் என்று காட்டிக் கொடுத்தது. யாராவது தெரிந்தவர்களாக இருப்பார்கள் என்ற எண்ணம் மனதுள் எழுந்தாலும் நித்திரைச் சோர்வு எழும்பவிடவில்லை தூரத்தே சில சிங்களப் பேச்சொலிகள்

எனக்கு முன்னுலிருந்த லோங்ஸ் அணிந்திருந்தவர் ஒரு பிரபல தமிழ்ப் பத்திரிகையை வாசித்து விட்டு அருகிலிருந்த மூக்குக் கண்ணுடி அணிந்தவருடன் தமிழர் ஒற்றுமை பற்றியப் பேசிக் கொண்டிருந்தார், புகைவண்டித் தாலாட்டும் குளிர் காற்றும் சேர்ந்து என் கண்களை மெதுவாகச் சொருகின,

மீண்டும் நான் கண்விழித்த போது நான் இருந்த பெட்டியினுள் ஜனக் கூட்டம் அதிகரித்தது. வெளியே எட்டிப் பார்த்தேன்; பொல்காவலை ஸ்ரேசனில் ரெயின் நின்று கொண்டிருந்தது எனக்குள்ளே சோம்பல் முறித்துக் கொண்டு நான் கொ

ணர்ந்திருந்த காலைச் சாப்பாட்டைச் சாப்பிடத் தொடங்கினேன்.

எதிரே இருந்த நடுத்தர வகுப்பைச் சேர்ந்த இரண்டு பேரும் இன்னமும் அரசியல் பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். தமிழருடைய இந்நிலைக்கு காரணம் தமிழரிடையேயுள்ள ஒற்றுமையின்மைதான் என்பதை மாறி மாறி இருவரும் ஒப்புக் கொண்டபடி இருந்தார்கள் எனக்கு வலப்பக்கத்தில் 'கருமமே கண்ணாயிருந்த' ஜோடிகள் இன்னும் தம் உலசிலிருந்து விடுபடவில்லை. புறப்பட்ட நேரத்தை விடப்பல புதிய முகங்கள் வெட்டியினுள் தென்பட்டன.

எனக்கு இரண்டு சீற்றுகளுக்கு அப்பால் புத்தகம் ஒன்றினால் முகத்தை மறைத்தபடி யாரோ ஒருவன் வாசிப்பில் ஆழ்ந்திருந்தான். அந்தப் புத்தகத்தில் அட்டை மிகக் கவர்ச்சிகரமானதாய் இருந்தது. மார்பிலே கட்டாரி பாய்ச்சப்பட்டு அங்கங்கள் வெளியே தெரிந்தும் தெரியாமலும் இருந்த கோலத்தில் ஒரு பெண் மல்லாந்து கிடப்பது போல அட்டைப் படம் அமைந்திருந்தது. அப்படத்தின் மேலே 'புல் புல் ரம்பா' என்று எழுதியிருந்தது. ஒரு ரூபா மர்ம நாவல் அது. வாசித்துக் கொண்டிருந்தவரின் முகம் எனக்குத் தெரியவில்லை. புத்தகத்திற்கு மேலால் கன்னவகிடு எடுத்த தலை தெரிந்தது. கீழே அவன் உடுத்தியிருந்த சாரனும் தெரிந்தது சர்ரன்காரன் ஒருத்தன் என் மனம் அவனை எடைபோட்டுக் கொண்டது.

ஒரு தடவை புத்தகத்தை தாழ்த்திக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்து பின்னர் மீண்டும் அவன் கண்கள் புத்தகத்திற்கு பதிந்துகொண்டன அந்தச் சிறுபொழுதில் மீசை அரும்பாத அவனுடைய கூர் முகம் அவனுக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயது இருக்கும் என்பதை எனக்குக் காட்டியது. அவன் எவரையுமே கவனியாது அந்தப் புல்புல் ரம்பாவில் தன்னை மறந்து, ஒன்றிப் போய் வாசித்துக் கொண்டிருந்தான். பொல்காவலையில் ஆட்கள் ஏறி இறங்தெதைக் கவனியாமல் அவன் வாசித்ததிலிருந்து, அவன் அதற்கு முந்திய ஏதோ ஒரு ஸ்ரேசனில் நான் தூங்கிக் கொண்டிருக்கையில் ஏறியிருக்க லேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்

அந்தப் பையன் 'புல்புல் ரம்பா' வாகித்ததை நான் மாத்திரமல்ல எனக்கு எதிரேயிருந்து அரசியல் பேசிய லோங்ஸ் போட்டிருந்த நபரும் அவதானித்திருக்க வேண்டும். தமிழ்ப் பத்திரிகையை வாசித்துவிட்டுத் தமிழர் ஒறறுமையற்றிப் பேசிக் கொண்டிருந்த பல்வேறு விடயங்களையிட்ட அவர்களின் பேச்சில் அந்தப் பையனுத், புல் புல் ரம்பாவும் அடிபட்டமை எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

கவனம் சற்றுநேரம் அவர்களின் பேச்சில் திரும்பியது.

"என்ன ஐசே! நம்மட தமிழ்ப் பெடியன்கள் இந்தத் தமிழ்ப் புத்தகங்களை வாசித்துக் கெட்டுப் போருங்கள் தமிழில இதவிட எத்தனை நல்ல புத்தகங்கள் இருக்கு. அதைச் சொல்லித் தர.த்தான் ஆள் இல்ல அவர் நல்ல புத்தகங்கள் என்று எதைக் குறிபபிட்டிருப்பார் என்று என் சிந்தனை ஓடியது அவர்களுடைய பேச்சு ஒரு தாவுத் தாவி மீனடும் அரசியலுக்குச் சென்றுவிட்டது.

அடுத்த ஸ்ரேசனை குருணாகலையில் ரெயின் நின்றது. பொல்காவலையைப்போல அதிக சனம் அந்த ஸ்ரேசனில் இல்லை. எனினும் இரண்டொருவர் ஏறினர்' நான் இருந்த பெட்டி ஓரளவு நிரம்பியிருந்தது, இன்னும் ஓரிருவர் இருக்கக் கூடிய இடமும் இருந்தது. ஒரு கிழவி மெல்ல மெல்ல ஏறி எங்கள் பெட்டிக்குள் வந்தாள்; என்னருகில் நின்று கொண்டு தயங்கித் தயங்கிச் சுற்று முற்றும் பார்த்தாள், நீண்ட மேற்கைச்சட்டை அணிந்து சாரனை இடுப்பிற் கட்டிய ஒரு சிங்களக் கிழவி அவள் மெல்லிய நடுக்கத்துடன் பரிதாபமாக இடம் தேடி நின்ற அவளை எவரும் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

சாரன்காரப் பையனின் தலை புத்தகத்தை விட்டு ஒரு கணம் நிமிர்ந்து கூட்டத்தைப் பார்த்தது. கிழவி நிற்பைத அவன் கண்கள் கவனித்து; திடீரென எழுந்து தனது இடத்தை அக்கிழவிக்குக் கொடுத்துவிட்டு அப்பையன் நின்றுகொண்டான். கிழவி தன் பொக்கை வாயைத் திறந்து ஒரு சிரிப்பை அவனுக்குக் கொடுத்துவிட்டு அந்த இடத்தில் அமர்ந்து கொண்டாள், சாரன்காரப் பையனும் பதிலுக்கு ஒரு சிரிப்பைச் சிந்திவிட்டு நின்றபடியே மீண்டும் புல் புல் ரம்பாவில்' தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.

எதிரேயிருந்த இருவரும் மீண்டும் பேச்சில் ஈடுபட்டுவிட்டனர், அவர்கள் பேச்சில் ஈடுபட்டு விட்டனர்; அவர்கள் பேச்சில் இப்போ 'கச்சதீவு' முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது.

இளம் ஜோடிகள் தம் உலகிலிருந்து நிஜ உலகுக்கு இன்னும் வரவில்லை. அவர்கள் உலகிலேயே கிடந்தனர்:

ஒரு ரீ குடிக்க வேண்டும் போல உணர்வு எனக்கு ஏற்பட்டது, வுபேயை நோக்கி நடந்தேன்,

○ ○

நான் ரீ குடித்து விட்டு மீண்டும் வந்த போது என்னுடைய இடத்தில் அமர்ந்திருந்து 'புல்புல்ரம்பாவை' அச் சாரன்காரப் பையன் வாசித்துக் கொண்டிருந்தான். எனக்கு எதிரில் இருந்தவர்கள் இன்னும்

பேசிக் கொண்டுதானிருந்தார்கள், என்னைக் கண்டதும் அப்பையன் திடீரென எழுந்து இடத்தை எனக்குத் தந்துவிட்டு ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு மீண்டும் வாசிக்க ஆரம்பித்து விட்டான். நான் என் இருக்கையில் அமர்ந்து கொண்டேன்;

ரெயின் மாகோச் சந்தியில் நின்றது. எங்கள் பெட்டியில் இருந்த சிலர் இறங்கினர். ஜோடிகளும் இறங்கி விட்டனர். சாரன்காரப் பையன் இப்போ வசதியாக உட்கார்ந்து கொண்டான்: அப்போது பலத்த ஆரவாரத்துடன் ஒரு சிங்களக் குடும்பம் எங்கள் பெட்டியினுள் ஏறியது. அது நாட்டுப் புறத்தைச் சேர்ந்த சிங்களக்குடும்பம் என்பதை அவர்கள் உடை பறைசாற்றியது, அக் குடும்பத்தின் தலைவன் சாரன் உடுத்து நிறச் சட்டை ஒன்று போட்டிருந்தான் பின்னால் அவன் மனைவி சிங்கள முறைப்படி சேலை அணிந்து ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தாள். அவளைத் தொடர்ந்து வந்த மூன்று பிள்ளைகளும் திமு திமு எனப் பாய்ந்து வந்து காலியாக இருந்த மூலைச்சீற்றுக்களில் அமர்ந்து வெளியே புதினம் பார்க்கத் தொடங்கி விட்டனர். புல்புல் ம்பா வாசித்துக்கொண்டிருந்த பையனின் எதிரே அக் குடும்பம் அமர்ந்து கொண்டது; தன் கைவிரல்களைச் சூப்பிக் கொண்டு துருதுரு என்று பார்த்தபடி அப்பெண்ணின் தோள் மீது கிடந்த குழந்தையின் முகம் என்னை கவர்ந்தது.

திடு திடுவென அக் குடும்பம் புகுந்ததால் ஏற்பட்ட கலகலப்பில் அந்தப் பெட்டியிலிருந்த அனைவரும் அக்குடும்பத்தை ஒரு விதமாகப் பார்த்தனர். சாரன் கட்டியுருந்த அக் குடும்பத் தலைவன் தான் சுமந்து வந்த சாக்கு மூட்டையினை மேலே வைத்தான்; பின்னர் தன் மனைவியைப் பார்த்து ஏதோ கூறிவிட்டு, புறங்கையால் நெற்றியில் வழிந்த வேர்வையைத் தேய்த்துப் புறங்கையைப் பின் பக்கச் சாரனில் அழுத்தித் துடைத்துக் கொண்டு மனைவிக்கு அருகில் அமர்ந்தான்.

இரைந்து பேசிய அவன் பேச்சில் ஒரு கிராமத்தொழிலாளியின் வெகுளித்தனமும், கள்ளமின்மையும் புலப்பட்டன எனக்கெதிரில் புல் புல் ரம்பா வாசித்துக் கொண்டிருந்தவனையோ, பெட்டிக்குள் இருந்த ஏனையோரையோ அவன் கவனியாது தன் மனைவியுடனும், பிள்ளைகளுடனும் சிங்களத்தில் இரைந்து பேசிச் சிரித்துக் கொண்டிருந்தான், அவன் மனைவி மருண்டு மருண்டு புன்னகைத்துக்கொண்டிருந்தாள்,

அவனுடைய அட்டகாசமான பேச்சும், அக்குடும்பத்தினரின் தோற்றமும் அப் பெட்டியினுள் இரண்டு சீற்றுக்களை அக் குடும்பத்தினர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தமையும் எனக்கெதிரில் இருந்து 'அரசியல் பேசிய' இருவருக்கும் சற்றுச் சினத்தை மூட்டியிருக்க வேண்டும்; இருவரும் ஆளை ஆள்

பார்த்து முகத்தைச் சுழித்துக் கொண்டனர்.

"இவங்களுக்கு இது தங்கட நாடென்ட நினைப்பு"

"பாருங்கோவன் தங்கட சொந்த ரெயினப் போல இடம் புடிச்சுக் கொண்டு கதைக்கிறத"

"வடக்குக் கிழக்கு மாகாணதிதுக்கு அங்கால அவங்கட ஆட்சிதானே"

"அதென்ன அப்படிச் சொல்றீங்க, அங்கயும் இவங்கட ஆட்சிதான்"

புதிதாக ஏறிய குடும்பத்தைப் பற்றிய தமது அபிப்பிராயங்களை என் முன்னிருந்த படித்தவர்கள் பரிமாறிக் கொண்டனர் ஆழும் பரம்பரை என்று இவர்களால் வர்ணிக்கப்பட்ட அப்பாவிச்சிங்களத் தொழிலாளியைப் பார்த்தேன். அவன் அங்கிருந்த ஏனைய மக்களிலிருந்தும் சிறிது வேறுபட்டு கசங்கிய உடைகளை அணிந்த தோற்றத்துடன் சாரனை அவிழ்த்துக்கட்டியவாறு பீடியைக் குடித்தபடி வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

ரெயின் சீரான வேகத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. 'ரிக்கற் ரிக்கற்' என்ற சத்தத்துடன் டிக் டிக் என்ற ஓசையுடனும் ரிக்கற் பரிசோதகர்கள் இருவர் நானிருந்த பெட்டிக்குள் நுழைந்தனர். அவர்களைக் கண்டதும் அனைவரும் பரபரப்புடன் தமது ரிக்கற்றுகளைத் தேடுவதும் எடுத்து வைத்துக் கொள்வதுமாக இருந்தனர்; என்னிடமிருந்த ரிக்கற்றை வாங்கிப் பார்த்து; வெட்டிக் கொடுத்துவிட்டு அப்புறம் சென்ற ரிக்கற் பரிசோதகரிடம் பயபக்தியுடன் தமது குடும்பத்திற்குரிய ரிக்கற்றுகளை எடுத்து நீட்டினான் அச் சாரன்காரச் சிங்களத் தொழிலாளி தன் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்த வண்ணம் அவற்றை வாங்கி வெட்டிக் கொடுத்துவிட்டுச் சாரன்காரப் பையனின் அருகில் வந்தார் ரிக்கற் பரிசோதகர் சிங்களத் தொழிலாளியின் பிள்ளைகள் ரிக்கற் பரிசோதகரை முகம் மலர மலர வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தன.

அப்போதுதான் நான்சாரன்காரப் பையனைக் கவனித்தேன்; மிகவும் பரபரப்புடன் தன் சட்டைப் பையைக் கைகளால் தோண்டிக் கொண்டிருந்தான்; கலவரமடைந்த முகத்துடன் சீற்றுக்குக் கீழே குனிந்து பார்த்தான்; நிமிர்ந்து சுற்றுமுற்றும் மிரண்டு மிரண்டு நோக்கினான்; வாசித்து மூடிவைத்த புத்தகத்தை எடுத்து படபட வென்று புரட்டினான். அவனருகில் நின்ற ரிக்கற் பரிசோதகர் இயமகிங்கரன் மாதிரி ஏளனப்பார்வை முகத்தில் தவள நின்று கொண்டிருந்தார்.

"ரிக்கற்றை எடு"

சாரன்காரப் பையனிடம் சிங்களத்தில் அவர் கூறினார். பையன் முகத்தில் கலவரத்தின் கருமேகம் நன்றாக படிந்து விட்டது.

பரிதாபமாக ரிக்கற் பரிசோத

கரை அவன் பார்த்தான்.

"நீ ரிக்கற் எடுத்தாயா" மீண்டும் அவனைச் சிங்களத்தில் பரிசோதகர் விசாரித்தகர் 'ஓம்' என்று தலையசட்டினான் பையன் பின்னர் ஏதோ நினைத்துக் கொண்டவனாகப் படாரெனக் கீழே குனிந்து தான் கொணர்ந்திருந்தபேக்கை எடுத்துத்திறந்து பரபரப்புடன் துழாவத் தொடங்கினான்: அவனுடைய முகத்திற் காணப்பட்ட தெளிவின்மை அதற்குள்ளும் ரிக்கற் இல்லை என்பதை எனக்குணர்த்தியது

"எங்கிருந்து வருகிறாய்?"

கொலைக் குற்றவாளியை விசாரிக்கும் தோரணையில் ரிக்கற் பரிசோதகர் கேட்டார்.

'வியாங்கொடையிலிருந்து' பையன் தமிழிலேயே சொன்னான்;

பையனுக்குச் சிங்களம் விளங்குமென்றும் சிங்களத்தில் பதில் சொல்லத் தெரியவில்லை என்றும் நான் ஊகித்துக் கொண்டேன்,

"எங்கே போகிறாய்"

"மட்டக்களப்புக்கு"

பையனிடம் ரிக்கற் இல்லை என்பது ஊர்ஜிதமானதும் அங்கிருந்த பலர் கசமுசக்க ஆரம்பித்து விட்டனர்.

"ரிக்கற்றுக்கு எவ்வளவு கொடுத்தாய்? பரிசோதகர் கேட்டார். பையனுக்குச் சட்டென்று அத்தொகை ஞாபகத்துக்கு வரவில்லை போலும். சற்று யோசித்து விட்டு மிச்சமாக சட்டைப் பையினுட் கிடந்த சில்லறைகளைக் காட்டிச்சொன்னான்

"இதுதான் ஐயா மிச்சம்"

"ரிக்கற் எடுக்காமல் ஏறிக் கொண்டு கணக்கா விடுகிறாய்? தண்டம் கட்டக் கூட உன்னிடம் காசில்லை என்ன?

சரி வா பின்னால்"

அவனை இழுத்துக் கொண்டு குற்றவாளியைப் பிடித்த பெருமிதத்தில் எல்லோரையும் ஒரு தடவை கம்பீரமாகப் பார்த்து விட்டுச் சென்றனர் இரு பரிசோதகர்களும்

கார்ட்டினுடைய அறைக்குள் அவனை அழைத்துச்செல்கின்றார்கள் என்பதும்! அடுத்த ஸ்ரேசனில் அவனை இறக்கி பொலிஸிடம் ஒப்படைத்து விடுவார்கள் என்பதும் எனக்குத் தெரியும், பரிதாபமாக அங்கிருந்த எல்லோரையும் பார்த்த வண்ணம் தனது சாரனை அவிழ்த்து மீண்டும் இறுக்கமாகக் கட்டிக் கொண்டு பையன் அவர்களுடன் சென்றான்.

நானிருந்த பெட்டிக்குள் இருந்த எல்லாரும் கசமுசக்கத் தொடங்கினர். அந்தப் பையனுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது எனக்குத் தெரியும் என் பக்கட்டினுள் ஐந்துரூபாயும் சில்லறையுமே இருக்கின்றன என்று; என் கையறு நிலை எனக்கே வேதனையைத் தந்தது, அதைவிட வேத

ளேயைத் தந்தன எல் முன்னி ருந்த அரசியல் பேசிக்கொண்டி ருந்த இரண்டு நாகரீக ஜன்மங் களும் பேசிய பேச்சு;

"ரிக்கற் எடுக்காம ஏறிற்று எடுத்தமாதிரி என்னமாய்ப் போய் பேசுகிருன்?"

"அவன்ர சட்டையையும், அவன் வாசித்த புத்தகத்தை யும் பார்த்த உடனே எனக் குத் தெரியும் அவன் ஒரு ஐ: ஆர் .சிக், காரன் எண்டு"

"ரிககற் எடுத்தவருக்கு எவ்வளவுக்கு எடுத்தன் எண்டு தெரியாதாம்"

"அதைவிடப் பெரியபகிடி; அவர் ரிக்கற்றைத் தேடுகிரு ராம்"

++++++++++++++++++++++++

## வருந்துகிறேம்

இவ்விதழில் தவிர்க்க முடியாத காரணத்தால் ஏற்பட்ட அச்சுப் பிழைகளுக்காக மிகவும் மனம் வருந்துகின்றேம்.

— ஆசிரியர்

++++++++++++++++++++++++

ஏதோ ஹாஸ்யத்தை உதிர்த்து விட்டதைப்போல இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர். பின் சிறிது நேரத்தால் தம் "அரசி யல்" பேச்சை ஆரம்பித்து விட் டனர்.

பையன் இருந்த சீற்றின் மேல் அவன் வாசித்த புல்புல்ரம்பா அனுதரவாகக் கிடந்தது. ஒரு விதமான சோகம் என்னுள் குடிகொண்டது.

"மாத்தயா" என்ற குரல் கேட்டுத் திரும்பினேன் எனக்கு எதிரில் சாரன் கட்டிக் கொண்டு குடும்பத்துடன் வந்த சிங்களத் தொழிலாளி நின்று கொண்டி ருந்தான். அவன் கை என்னிடம் யாசிப்பது போல் நீண்டிருந்தது "என்ன?" என்ற கேள்விக்குறி யுடன் நான் தலைநிமிர்ந்து அவ னைப் பார்த்தேன் அவன் சிங்க ளத்தில் என்னிடம் சொன்னன்

"அவனும் எங்களப்போல ஏழைதானே. தொலைத்துவிட்ட ரிக்கற்க்குப் பணம் கொடுக்க அவனிட்டக்காசு இல்ல நாமெல் லாரும் காசு போட்டு அவனு டைய தண்டப்பணத்தைக் கொடுப்பம் பாவம்"

உறுதியுடன் என் முன் நீண்டி ருந்த வலிமைமிக்க அந்தக் கரத் தைப் பார்த்தேன். அழுக்குப் படிந்து, வியர்வை கசிந்திருந்த அந்தக் கரத்தை அப்படியே பிடித்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டும் போல இருந்தது, என்னிடமிருந்த ஐந்து ரூபாவையும் அப்படியே அவன் கரத்தில் வைத்தேன் என்னை ஆச்சரியத்துடன் ஒரு முறை பார்த்தான். அவ்வளவு தான் பிறகு அவன் கரம் அங் கிருந்த ஒவ்வொருவரிடமும் நீண்டு நீண்டு அப்பையனுக்காக யாசித்தது மந்திர சக்தியால் கட்டுப்பட்டவர்கள் போல எல்

லோரும் படபட வென்று தம் மாவியன்ற பணத்தை அவன் கைகளில் வைத்தனர். ஞாய மான தொகை சேர்ந்திருக்க வேண்டும். காசு சேர்த்து முடித் த திருப்தி ஏற்பட்டதும் கர்ம வீரன் போல தலைநிமிர்ந்து கம் பீரமாக, பையனை கொண்டு நோக்கி சென்ற அறையை நடந்தான் அச்சிங்களத் தொழி லாளி.

என் முன் இருப்த படித்தவர் கள் இருவரும் இன்னும் அரசி யல் பேசிக் கொண்டே இருந் தனர்

● ● ●


COMMISSION AGENTS FOR
LOCAL PRODUCTS

PEOPLE TRADE &
SUPPLIES

112, FOURTH CROSS STREET,
143, MALIBAN STREET,
COLOMBO–11


நெல்லியடி கரவெட்டியில் வதியும் இச்சஞ்சிகையின் ஆசிரியரும் உரிமையாளருமான திரு. நெல்லை நடேசு அவர்களால் நல்லூர் நாவலன் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டது.

படித்தீர்களா?

சபா - ஜெயராசாவின்

## "ஊர் வீதி"

(புதுக்கவிதை தொகுதி)

விலை ரூபா 4/-

★

குமாரி ஜெயவர்த்தனாவின்

## "இலங்கையில் இடதுசாரிகளின் தோற்றம்"

விலை ரூபா 3/-

★

யாழ் பல்கலைக் கழக தமிழ்மன்ற தொகுப்பான

## 'ஆறு நாடகங்கள்'

★

ஆர் - ஜெயரத்தினராசாவின்

## 'இலங்கைப் பொருளாதாரம்'

★

பிரதி வேண்டுவோர் எம்முடன் தொடர்பு கொள்க.

வாழ்த்துக்கள்:

GREENLANNDS

COOL BAR & COFFEE BAR.

BUS STAND, — NELLIADY.